**அரநாயக பிரதேச சபை - 2022**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரநாயக பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் அரநாயக பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கைகணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு,இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில்மேலும்விபரிக்கப்பட்டுள்ளது.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில்என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் ததுவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 298,863 ஆன ஊக்குவிப்பு படிகள் செலுத்தி இருக்கையில் செலுத்த வேண்டியதாக மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. | அதனை சரிசெய்வதாக. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டில் கூடுதலாக அறவிட்ட விஷேட முற்பணம் ரூபா 12,000 தொகை மீளாய்வாண்டில் திருப்பிச் செலுத்தல், அறவிட வேண்டிய மீதியாக மீண்டும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கைத்தவறினால் கனணிப்படுத்தப்பட்டுள்ள துடன் அதனை சரிசெய்துள்ளதாக. | - மேற்படி - |
| (இ) | நிலையான சொத்துப் பதிவேடு பிரகாரம் ரூபா 40,083,712 ஆன 08 இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 6,183,967 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒரு வாகனம் மாவனல்ல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சியவற்றை கணக்கீடு செய்துள்ளதாக. | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய செலவினத்திற்காக ரூபா 32,021 தொகை கூடுதலாக மற்றும் ரூபா 6,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | மதிப்பீடு செய்ய கடினமாகையால் கிட்டிய பெறுமானத்திற்கு கடன்கொடுனர் ஏற்பாடு ஒதுக்கியதாக. | - மேற்படி - |
| (உ) | ரூபா 49,913,700 ஆன கட்டிடமொன்று மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 23 காணிகளை கணக்கீடு செய்திருக்கவில்லை. | இக் காணிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதாக. | - மேற்படி - |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணியும் கட்டிடங்களும் மற்றும் 04 நடைமுறை சொத்து விடயங்களில் நிதிக்கூற்று பிரகாரம் மீதி, அந்த அந்த கணக்கு விடயங்களின் துணை ஏடுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 807,219 ஆன வித்தியாசம் நிலவியது. | ஏற்றுக் கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதி துணை ஏடுகளுடன் இணக்கம் செய்ய முடியுமாக இருத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 9,389,129 ஆன 02 நிலையான சொத்து விடயங்களிற்காக அட்டவணைகள் சமர்பிக்கப்படவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | எழுத்துமூல சான்றுகள் சமர்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி. 571 | 2011 முதல் 2021 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 628,194 ஆன 02 ஆண்டுகளை விஞ்சிய 39 வைப்புக்கனை தீர்த்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட வில்லை. | நிதிப் பிரதமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 3,733,416 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 10,879,874 ஆகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| வங்கிக் கணக்கொன்றில் காணப்பட்ட ரூபா 8,619,147 ஆன மீதியை குறுகிய கால முதலீடொன்றில் ஏனும் ஈடுபடுத்தி வருமானம் ஈட்டிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலையான வைப்பிற்காக அங்கீகாரத்திற்கு சமர்பித்த போதும் அது பொதுச் சபையில் அங்கீகரிக்கப்படவில்லை என. | முதலீட்டின் மூலம் வருமானம் ஈட்டிக் கொள்ள வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் வரி | 2,478,270 | 2,787,555 | 2,665,911 | 326,136 | 2,468,000 | 2,579,358 | 2,742,496 | 288,608 |
| வாடகை | 4,632,500 | 3,376,427 | 3,375,962 | 147,441 | 2,602,200 | 3,422,025 | 3,022,628 | 456,755 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 408,564 | 560,910 | 554,910 | 9,000 | 430,100 | 470,662 | 470,662 | - |
| ஏனைய வருமானம் | 3,101,200 | 4,483,650 | 3,707,597 | 61,904 | 2,639,000 | 3,495,917 | 3,819,322 | - |
| கூட்டுத் தொகை | 10,620,534 | 11,208,542 | 10,304,380 | 544,481 | 8,139,300 | 9,967,962 | 10,055,108 | 745,363 |

### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி, ஏக்கர் வரி மற்றும் கடை வாடகை போன்ற வருமான விடயங்களிலிருந்த 2022 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 391,475 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கு இடையிலான காலம் பழைய ரூபா 164,504 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 152,989 ஆன மீதியும் காணப்பட்டது. | நிலுவை தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதாக. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக 35 விளப்பரப் பலகைகளிலிருந்து ரூபா 107,686 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, விளம்பரப் பலகை வருமானத்தை பில்லிடாததால் ஆண்டினுள் கிடைக்க வேண்டிய மொத்த வருமானம் கணக்கீடாகி இருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை வழிகாட்டிக் கோவையின் 11/2010 இலக்க சுற்றறிக்கையின் 3.7 பந்தி பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான பெக்கோ இயந்திரத்தை இலவசமாக வழங்கக் கூடாத போதும், அதற்கு இணங்காதவாறு 291 இயந்திர மணித்தியாலங்களிற்கு வழங்கியதால் மொத்தமாக ரூபா 1,309,500 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | இதன் பின்னர் விடய அலுவலர்களின் எழுத்துமூல கோரிக்கைக்கு மாத்திரம் பெக்கோ இயந்திரத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகவும், சில மணித்தியாலங்கள் விளையாட்டு மைதானம், பாதை மற்றும் புனிதஸ்தளங்கள் திருத்துவதாகவும், எதிர்காலத்தில் கோரிக்கையை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளவும், விளையாட்டு பூமி மற்றும் பன்சல்கள் போன்ற நிலையங்களிற்காக பிரதேச மக்களிடமிருந்து பணத் தொகையொன்றை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த 06 வழக்குகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றிக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை மேற்கொள்ளும் சொத்து மதிப்பீடு 2011 ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்படவில்லை. | மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சரியாக வருமானம் ஈட்டிக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கட்டிட நிர்மாணத்திற்காக 2017 – 2022 ஆண்டுகளிற்கு இடையிலான காலத்தினுள் அங்கீகரிக்கப்பட்ட 253 விண்ணப்பங்களில் 24 இற்கு மாத்திரம் இணக்கப்பாட்டு சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிர்மாணித்த கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | பிரதேச மக்களின் எதிர்ப்பு காரணமாக திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு பெற்றுக் கொண்ட காணியில் கழிவுகளை வெளியேற்றாது ரூபா 880,000 ஆன வருடாந்த குத்தகை அடிப்படையில் காணியொன்றை பெற்று கழிவுகள் வெளியிடப்பட்டிருந்தன. 2022 ஆண்டினுள் கழிவு முகாமைத்துவத்திற்கு ரூபா 6,746,686 செலவிடப்பட்டிருந்த போதும், அவற்றிலிருந்து பசளை உற்பத்தி செய்து வருமானம் ஈட்ட சபைக்கு இயலாதிருந்தது. | இயற்கை பசளை கருத்திட்டமொன்றிற்காக மதிப்பீடு மற்றும் கருத்திட்ட அறிக்கை ஒன்றை தயாரிப்பதாக. | கழிவுகளை வெளியிடல் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 5,235,846 ஆன நானாவித கடன்கொடுனர் மீதியினுள் 1 ஆண்டிற்கும் 4 ஆண்டிற்கும் இடையிலான காலம் பழைய ரூபா 579,034 ஆன மீதி காணப்பட்டது. | செலுத்த சலுகைக் காலமொன்று கோரியுள்ளதுடன் கைத்தொழில் கடன்கொடுனர் கொடுப்பனவிற்காக மாகாண சபையிலிருந்து பணம் கிடைத்ததாக. | கடன் கொடுனர் மீதியை தீர்க்க வேண்டும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமற்ற ரூபா 518,000 பெறுமதியான 02 டேலர்களின் உடமையை சுவீகரிக்க அல்லது மீண்டும் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே, சபைக்கு சொந்தமான ரூபா 5,542,128 ஆன 05 வாகனங்களின் உரிமையை சட்ட ரீதியாக சுவீகரித்திருக்கவில்லை. | வாகனங்களை சுவீகரிக்க கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சொத்துக்களின் உடமை தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 03 சுடுகாடுகளை சபையின் சொத்தாக இனங்கண்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (இ) | பெறுமதி ரூபா 3,505,000 ஆன சபைக்கு சொந்தமான 03 டெக்டர்கள் மற்றும் 2 டேலர்கள் 2 ஆண்டிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக செயலற்று காணப்பட்டது. | இவ் வாகனங்களை ஏலவிற்பனை செய்வதாக. | சொத்துக்களை பயன்படுத்தாது வைக்கக்கூடாது. |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் 83 பேர்களான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 08 வெற்றிடங்கள் காணப்பட்டது. அவ்வாறே, வருமான சேகரிப்பு, சாரதி மற்றும் சுகாதார நிர்வாக பதவிகளில் கடமைக்காக தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஏற்றுக் கொள்கிறேன். | தேவைக்கேற்ப வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். |